புனிதப் பயணத்திற்கு ஒரு நபருக்கு ஆகும் செலவான 25,000 ரூபாயில், 10,000 ரூபாயும் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-30

4. அறிவிப்புகள்

(அ) ஆட்சியின் ஓராண்டு சாதனை விழாவைக் கொண்டாடும் வகையில் புனித ஜார்ஜ் கோட்டை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் கண்டுகளிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *'அச்சம் என்ற வார்த்தையை, அறியாமலே உச்சம் தொட்டவர்', நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)*

துரோகிகள் விட்டெறிந்த கற்களையே படிக்கற்களாய் மாற்றுகின்ற பக்குவம் பெற்றவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

ஏணிகள் தயவின்றியே, வானவில்லை வளைக்கின்ற வல்லமை கற்றவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

பன்மொழிகள் கற்றுணர்ந்த பல்கலை வித்தகர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சியை நேசிப்பதால், அதனையே தனதாக்கிக் கொண்டவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

புத்தகங்களையே சுவாசிப்பவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

திறமைகளின் குவியலாய்த் திகழ்பவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

ஆற்றலின் ஊற்றுக் கண், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

தாய்மையின் உறைவிடமானவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழினத்தின் தலைமையானவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

2012 மே 15] [பேரவைத் தலைவர்]

ததும்பாத நிறைகுடமானவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

சூழவரும் பகை வென்றவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

சூழ்ச்சி எனும் தடை வென்றவர், நம் அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துணை புகழுக்குரிய நம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த உடனே, பழமையைக் காக்க உத்தரவிட்டு, கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து முக்கியத்துவம் வாய்ந்த சென்னை, புனித ஜார்ஜ் கோட்டை நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டுள்ளது. இக்கோட்டை, ஒட்டுமொத்தத் தமிழகத்தின் பழம்பெருமையினையும், பண்பாட்டு மரபுகளையும் கொண்டுள்ளது. நேர்த்தியான கட்டட அமைப்புடன், இயற்கை வனப்புடைய கலையழகு ஒளிரும் வரலாற்றுச் சிறப்புக்குரிய இக்கோட்டையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பழம்பெருமையைக் காத்திட, இக்கோட்டையில் செயல்படாமல் இருந்த சட்டமன்றத்தினை, மீண்டும், மீண்டும் இக்கோட்டையிலே (மேசையைத் தட்டும் ஒலி) செயல்பட நடவடிக்கை எடுத்து, பழைய பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து வருபவர்தான், நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'மாற்றம் தந்த மக்களுக்கு, ஏற்றம் தந்த' மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், தமிழக மக்கள் பெருமைப்படும் வகையில், சிறப்பாக பல்வேறு பொருளாதார முன்னோடித் திட்டங்களை இந்த ஓராண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய சிறப்புக்குரிய ஓராண்டு சாதனை விழாவைக் கொண்டாடும் வகையில், இப்புனித ஜார்ஜ் கோட்டை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வண்ண விளக்குகளால், மின்னொளியால் ஜொலிக்கும் இப்புனித ஜார்ஜ் கோட்டை, 'நம்மையும்' மீட்டவர் நம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று எண்ணி பூரிப்படையும் இப்புனித ஜார்ஜ் கோட்டையின் கண்கொள்ளாக் காட்சியினை, மாண்புமிகு உறுப்பினர்கள் இரவில் கண்டு களிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)